செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 290 நாள்: 16.5.17

## செய்தி குறிப்பு வெளியீடு

## தாட்கோ மூலம் NSFDC/NSKFDC திட்டத்தின் கீழ் கடன் பெற்ற பயனாளிகளுக்கு அபராத வட்டி தள்ளுபடி

# வேலூர் மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

தாட்கோ மூலம் வேலூர் மாவட்டத்தில் (NSFDC) தேசிய தாழ்த்தப்பட்டோர் நிதி வளர்ச்சி கழகம் மற்றும் (NSKFDC) தேசிய துப்புரவுத் தொழிலாளர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் ஆகிய இரு திட்டங்களில் பயனடைந்த பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்ட தாட்கோ பருவக்கடன் அசல், வட்டி மற்றும் அபராதவட்டி ஆகியவைகளை நாளது தேதிவரை கணக்கிடப்பட்டு அன்றைய நிலையில் பருவக்கடன் அசல் (ம) வட்டி தொகையினை ஒரே தவணையில் (One Time Settlement) அல்லது மூன்று சம தவணைகளாகவோ செலுத்துவோருக்கு அபராத வட்டி தொகை மட்டும் தள்ளுபடி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த சலுகை ஒரு ஆண்டுக்கு மட்டும் அமுலில் இருக்கும் (13.04.2017 முதல் 12.04.2018 வரை).

நிபந்தனைகள்

1. ஒருமுறை மட்டும் நேர் செய்யும் திட்டம் அரசாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்கு மட்டுமே அமுலில் இருக்கும்
2. கடனாளிகள் அசல் மற்றும் சாதாரண வட்டித் தொகையை செலுத்த வேண்டும்
3. அசல் மற்றும் வட்டித் தொகையை ஒரு தவணையிலோ (அல்லது) மூன்று சம தவணைகளாகவோ செலுத்த வேண்டும்
4. இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் கடனாளிகள் அவர்களின் விருப்பத்தினை எழுத்து பூர்வமாக தெரிவிக்க வேண்டும்
5. விருப்பம் தெரிவிக்கும் கடனாளிகளுக்கு அபராத வட்டித் தொகை முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்
6. கடன் மற்றும் வட்டித் தொகை செலுத்தப்பட்டு விட்டால் "கடன் தொகை நிலுவை இல்லை" என்ற சான்றினை தாட்கோ பயனாளிகளுக்கு வழங்கப்படும்
7. கடன் தொகை முழுவதுமாக செலுத்தப்பட்டவுடன், கடன் கணக்கு முடிக்கப்பட்டு, துணைப்பிணையம் கடனாளிகளுக்கு விடுவிக்கப்படும்
8. இத்திட்டத்தில் கடனாளிகள் ஏற்கனவே அபராத வட்டி செலுத்தியிருப்பின் நிதி நிறுவனங்களின் வழிமுறைகளில் உள்ளவாறு அத்தொகையை திருப்பி வழங்கவோ அல்லது தற்போது நிலுவையில் உள்ள கடன் தொகையில் சரிக்கட்டப்படமாட்டாது. இக்கருத்துரு வருங்கால வாழ்வுக்கு மட்டுமேயானது. எந்தவித முன்நாளிட்ட பயன்சரிகட்டலும் செய்யப்படமாட்டாது.

எனவே தாட்கோ பயனாளிகள் NSFDC/NSKFDC பருவக்கடன் அசல் (ம) வட்டி தொகையினை ஒரே தவணையில் (One Time Settlement) செலுத்தி பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.S.A.ராமன் IAS அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சியர்
வேலூர் மாவட்டம்

9/5/2017

செ.ம.தொ.அ. 16/5/17
வேலூர்- 9.